# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

ஆணை நாள் 10.11.2020

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 144/B/2019**

திரு.B.M.போஜன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
குன்னூர் வட்டாட்சியர் அலுவலகம்,
நீலகிரி மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCKDOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், தொலைபேசியின் வாயிலாக மேற்கொண்ட விசாரணையில் மனுதாரர் திரு.B.M.போஜன், அவர்களும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.இராஜலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், குன்னூர் வட்டாட்சியர் அலுவலகம், நீலகிரி மாவட்டம் அவர்களும் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 11.07.2018 தேதியிடப்பட்ட மனுவில், 23.10.2017ல் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அளித்த மனு எண்.2017/9005/11/881943/1023 மற்றும் 18.12.2017ல் அளித்த மனு எண்.2017/9005/11/03/815/1218 ஆகிய மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக 5 இனங்களில் தகவல்களை கோரி பொதுத் தகவல் அலுவலர்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார். அம்மனுவினைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது),நீலகிரி மாவட்டம் அவர்கள் 18.07.2018ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக பிரிவு 6(3)ன் கீழ் மனுதாரரின் மனுவினை பொதுத் தகவல் அலுவலர், குன்னூர் வட்டாட்சியர் அலுவலகம், நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார். தலைமையிடத்து துணை வட்டாட்சியர், குன்னூர் அவர்கள் 09.08.2018ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார்.

3. உரிய தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர் 07.09.2018 தேதியிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 07.01.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கின் மீது தொலைபேசியின் வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. தொலைபேசியின் வாயிலாக மேற்கொண்ட விசாரணையில், பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மனுதாரர் கேத்தி I கிராம காலையில் உள்ள புல எண்கள் 30914-30915 309/6 மற்றும் 309/7 புலண்களுக்கு சிட்டாக்களில் தவறாக சேர்த்த பெயர்களை நீக்க கோரி மனு அளித்த மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக 5 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார் என்றும், குன்னூர் வட்டம் கேத்தி I கிராமம் புல எண் 309/7 காலைக்குரிய சிட்டாவில் பவுத்தி ஆணை எண்.ப.மா-II 1456/13, நாள் 13.08.2013ன்படி திரு.எம்.என்.ராஜ்குமார் மற்றும் மகாலிங்கம் என்பவரின் வாரிசுகளின் பெயர் தாக்கல் செய்த ஆணையை ரத்து செய்து மறு நில அளவைக்கு பின் இருந்த பி.எம்போஜன் பெயரினை மீண்டும் தனிப்பட்டாதாரராக தாக்கல் செய்து ஆணை வழங்க சார் ஆட்சியர், குன்னூர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும், ஆணை கிடைக்கப்பெற்றவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், மனுதாரர் கோரிய 5 இனங்களுக்கான தகவல்களையும் 7 நாட்களுக்குள் வழங்குவதாகவும் உறுதியளித்தார். மனுதாரரும் மேற்படி புல எண்களுக்கு சிட்டாக்களில் தவறாக சேர்க்கப்பட்ட பெயர்களை நீக்க வேண்டுமென்றும் தான் கோரிய தகவல்களும் வழங்கப்படவேண்டுமென்றும் தெரிவித்தார்.

5. **எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றது:**

1. **பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 நாட்களுக்குள் மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களையும் பிரிவு 7(6)ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி, மனுதாரர் அதனை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கிய தகவல்கள் ஆகியவைகள் ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகின்றது. மேற்படி ஆணைக்கிணங்க தகவல்கள் வழங்கப்படாத பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)ன் கீழ் பிரிவு 20(1)ன் கீழ் அதிகப்பட்ச தண்டத் தொகையாக ரூபாய் 25,000/-ம் பிரிவு 20(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்க நேரிடும் என தெரிவித்து, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகின்றது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 144/B/2019</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
குன்னூர் வட்டாட்சியர் அலுவலகம்,
நீலகிரி மாவட்டம்.

திரு.B.M.போஜன்,த/பெ.மாந்தையன்,
10/41 மேல்ஓடையரட்டி,
கேத்தி-I கிராமம்,கொல்லிமலை அஞ்சல்,
நீலகிரி மாவட்டம் - 643 215.

Copy to: File
SJPS-18-11-2020